# யூன் – 29 – வெள்ளி

## திருத்துதர்கள் பேதுரு – பவுல்

**“நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்.”மத்தேயு 16:16**

## முதல் வாசகம் : திருத்துதர் பணி 12 : 1 - 11

அக்காலத்தில் ஏரோது அரசன், திருச்சபையைச் சார்ந்த மக்கள் சிலரைப் பிடித்துக் கொடுமைப்படுத்தினான்.யோவானின் சகோதரரான யாக்கோபை வாளால் கொன்றான்.அது யூதருக்கு மகிழ்ச்சி அளித்ததைக்கண்டு அவன் தொடர்ந்து பேதுருவையும் கைது செய்தான். அது புளிப்பற்ற அப்பவிழா நாள்களில் நடந்தது. அவரைப் பிடித்துச் சிறையில் அடைத்துக் காவல் செய்யுமாறு நான்கு குழுக்களிடம் அவன் ஒப்புவித்தான். பாஸ்கா விழாவுக்குப்பின் மக்கள் முன்பாக அவரது வழக்கை விசாரிக்கலாம் என விரும்பினான். பேதுரு இவ்வாறு சிறையில் காவலில் வைக்கப்பட்டிருந்தபோது திருச்சபை அவருக்காகக் கடவுளிடம் உருக்கமாக வேண்டியது.ஏரோது அவரது வழக்கைக் கேட்பதற்கு முந்தின ,ரவில், பேதுரு படைவீரர் இருவருக்கு இ.டையே இருசங்கிலிகளால் கட்டப்பட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார். காவலர்கள் வாயிலுக்கு முன் சிறையைக் காவல் செய்துகொண்டிருந்தார்கள்.அப்போது ஆண்டவரின் தூதர் அங்கு வந்து நின்றார். அறை ஒளிமயமாகியது. அவர் பேதுருவைத் தட்டியெழுப்பி, ”உடனே எழுந்திடும்” என்றுகூற, சங்கிலிகள் அவர் கைகளிலிருந்து கீழே விழுந்தன.வானதூதர் அவரிடம், ”இடைக் கச்சையைக் கட்டி மிதியடிகளைப் போட்டுக் கொள்ளும்” என்றார். தூதர் அவரிடம், ”உமது மேலுடையை அணிந்து கொண்டு என்னைப் பின்தொடரும்” என்றார்.பேதுரு வானதூதரைப் பின் தொடர்ந்து சென்றார். தூதர் மூலமாக நடந்தவையெல்லாம் உண்மையென்று அவர் உணரவில்லை. ஏதோ காட்சி காண்பதாக அவர் நினைத்துக்கொண்டார். அவர்கள் முதலாம் காவல் நிலையையும்,,ரண்டாம் காவல் நிலையையும் கடந்து நகருக்குச் செல்லும் ,ரும்புவாயில் அருகே வந்தபோது அது அவர்களுக்குத் தானாகவே திறந்தது. அவர்கள் வெளியேவந்து ஒருசந்து வழியாகச் சென்றார்கள். உடனே வானதூதர் அவரைவிட்டு அகன்றார்.பேதுரு தன்னுணர்வு பெற்றபோது, ”ஆண்டவர் தம் வானதூதரை அனுப்பி ஏரோதின் கையிலிருந்து என்னை விடுவித்து, யூதமக்கள் எதிர்பார்த்த எதுவும் நிகழாதவாறு என்னைக்காத்தார் என்று நான் உண்மையாகவே அறிந்துகொண்டேன்” என்றார்.

**பதில்பாடல் :** எல்லா வகையான அச்சத்தினின்றும் ஆண்டவர் என்னை விடுவித்தார்.

## இரண்டாம் வாசகம் : 2 திமோத்தேயு 4: 6 –8, 17 – 18

அன்பிற்குரியவர்களே!, நான் இப்போதே என்னைப் பலியாகப் படைக்கிறேன். நான் பிரிந்து செல்லவேண்டிய நேரம் வந்து விட்டது.நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன் என் ஓட்டத்தை முடித்துவிட்டேன். விசுவாசத்தைக் காத்துக்கெண்டேன். இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது நேரிய வாழ்வுக்கான வெற்றி வாகையே. அதை இறுதி நாளில் ஆண்டவர் எனக்குத் தருவார் நீதியான அந்த நடுவர் எனக்கு மட்டுமல்ல, அவர் தோன்றுவார் என விரும்பிக் காத்திருக்கும் அனைவருக்குமே தருவார்.நான் அறிவித்த செய்தி நிறைவுற்று, அனைத்து நாட்டவரும் அதனைக் கேட்க வேண்டுமென்று ஆண்டவர் என் பக்கம் நின்று எனக்கு வலுவூட்டினார் சிங்கத்தின் வாயிலிருந்தும் என்னை விடுவித்தார்.தீங்கு அனைத்திலிருந்தும் அவர் என்னை விடுவித்துத் தம் விண்ணரசில் சேர்த்து எனக்கு மீட்பளிப்பார். அவருக்கே என்றென்றும் மாட்சி உரித்தாகுக! ஆமென்.

## நற்செய்தி : மத்தேயு 16 : 13 – 19

அக்காலத்தில் இயேசு, பிலிப்புச் செசரியா பகுதிக்குச் சென்றார். அவர் தம் சீடரை நோக்கி, ”மானிடமகன் யாரென்று மக்கள் சொல்கிறார்கள்?” என்றுகேட்டார்.அதற்கு அவர்கள், ”சிலர் திருமுழுக்கு யோவான் எனவும் வேறுசிலர் எலியா எனவும் மற்றும் சிலர் எரேமியா அல்லது பிற இறைவாக்கினருள் ஒருவர் என்றும் சொல்கின்றனர்” என்றார்கள்.”ஆனால் நீங்கள், நான் யார் எனச் சொல்கிறீர்கள்?” என்று அவர் கேட்டார்.சீமோன் பேதுரு மறுமொழியாக, ”நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்” என்று உரைத்தார். அதற்கு இயேசு, ”யோனாவின் மகனான சீமோனே, நீ பேறு பெற்றவன்.ஏனெனில் எந்த மனிதரும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை மாறாக விண்ணகத்திலுள்ள என் தந்தையே வெளிப்படுத்தியுள்ளார்.எனவே நான் உனக்குக் கூறுகிறேன் உன் பெயர் பேதுரு. இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றி கொள்ளா.விண்ணரசின் திறவுகோல்களை நான் உன்னிடம் தருவேன். மண்ணுலகில் நீ தடைசெய்வது விண்ணுலகிலும் தடைசெய்யப்படும். மண்ணுலகில் நீ அனுமதிப்பது விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும்” என்றார்.

**தியானம் :** இறையாட்சி எனப்படுவது விண்ணக அருளோடு மண்ணின் மனிதர் தமது சுயமுயற்சியை இணைத்துக் கட்டியெழுப்புவதாகக் கருதப்படுவதாகும். ஆதித்திருச்சபையின் மாபெரும் தூண்களாக வாழ்ந்த மனிதர்களான பேதுரு, பவுல் ஆகியோரை அன்னையாம் திருச்சபை புனிதர்களென நினைவு கூர்ந்தாலும், இவ்விருவரும் ஆண்டவர் இயேசுவிற்கு எதிராகச் செயற்பட்டதாக வரலாறு தெரிவிக்கின்றது. ஆயினும், ஆண்டவர் இயேசுவால் தொடப்பட்டு, தமது கடின உழைப்பால் ஆரம்பத் திருச்சபையைக் கட்டியெழுப்பிய, ஒருவருக்கொருவர் வித்தியாசமான சுபாவமுடையவர்கள். படிப்பறிவற்ற மீன்பிடியாளர் பேதுரு. மனிதர்களைப் பிடிப்பவராக “நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்” (மத்தேயு16:16) என அறிக்கை செய்தவர் திருச்சபையின் தலைமைக்கல்லாக உயர்த்தப்பட்டார். ஆண்டவர் இயேசுவின் பாடுகளின் போது “அவரை நானறியேன்” எனத்தள்ளாடும் பாறையாக மறுதலித்தவர். பெந்தகோஸ்தேயில் தூய ஆவியால் நிரப்பப்பட்டு இயேசுவே ஆண்டவர் எனத்தலைமைப் பாறையாக “மனிதர்களுக்குக் கீழ்ப்படிவதைவிட கடவுளுக்குக் கீழ்ப்படிவது மேல்” (திருத்தூதர் பணி5:29) எனப்பகிரங்கமாகப் போதனை செய்தார். இறுதியில் கிறிஸ்துவுக்காகத் தலைகீழாக அறையப்பட்டு மரித்துப் புனிதராக உயர்த்தப்பட்டார். சவுல் கமாலியேல் எனப்படும் யூதமத அறிஞரிடம் கற்றுத்தேறிய வல்லுனர். இயேசுவை ஆண்டவரென ஏற்றுக்கொண்டவர்களைக் கொலைசெய்ய ஆணைபெற்ற யூதப்படைவீரர். தமஸ்குநகரில் “நீ துன்புறுத்தும் இயேசு நானே” (திருத்தூதர் பணி9:5) எனத்தெரிவிக்கப்பட்டு இயேசுவின் சீடராக பவுல் அடிகளாக மாற்றப்பட்டார். “இயேசுவே இறைமகன்” (திருத்தூதர் பணி9:20) எனப்பிற இனத்தாருக்கு நற்செய்தியைப்பரப்பி “நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன் என் ஓட்டத்தை முடித்துவிட்டேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். ”(2திமோத்தி4:7) எனத்துணிவுடன் அறிவித்ததால் பிற இனத்தவரின் திருத்தூதரென அழைக்கப்படுகிறார். எந்த அரசரின் கட்டளைக்காக கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினாரோ, அதே அரசரது படைவீரர்களால் சிறைபிடிக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாகி மரணமடைந்து புனிதராக உயர்த்தப்பட்டார். இன்றைய புனிதர்கள் இருவரும் தமது பணிவாழ்வின் ஆரம்பத்தில் வாழும் மெசியாவான ஆண்டவர் இயேசுவின் மட்டில் இடறல்பட்டாலும், இறுதியில் ஆண்டவர் இயேசுவுக்காகத் தமது உயிரையே கொடுத்தவர்கள். ஆண்டவர் இயேசுவை மெசியா என அறிவிக்கும் இறையாட்சிப் பணியில் நாம் எப்படிப்பட நிலையில் இருக்கின்றோம்? எமது குடும்பங்களில்இ வேலைத்தளத்தில்இ சமூகத்தில் ஆண்டவர் இயேசுவை அடுத்தவர்களுக்கு அறிவிக்கலாம். அந்த உன்னதமான பணிக்கென எம்மைத் தயார்செய்வோம்.